

தீபத்திருவிழாவிற்கு வருகை தந்த ஆன்மிக பெருமக்களுக்கு திருவண்ணாமலை மாவட்ட திமுக மற்றும் தூய்மை அருணை அமைப்பின் சார்பில், பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு அறுசுவை உணவு வழங்குதலை தொடங்கி வைத்தார். உடன் கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, இரா.ஸ்ரீதரன், எஸ். பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், ஏ.ஏ.ஆறுமுகம், குட்டி க.புகழேந்தி, ந.சீனுவாசன், சு.விஜி (எ) விஜயராஜ், அ.கோவிந்தன், கு.கணேஷ், வேங்கிக்கால் பரத் உட்பட பலர் உள்ளனர்.

### திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. மற்றும் தூய்மை அருணை சார்பில்

# தீபத்திருவிழாவிற்கு வருகை தந்த 50ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு உணவு வழங்கல்!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்தார்!

திருவண்ணாமலை, டிச. 4–

திருவண்ணாமலை, அண்ணா நுழைவு வாயில் அருகில்உள்ள, முத்தமிழறிஞர்கலைஞர்சிலைஅருகில், திருவண்ணாமலை மாவட்ட திமுக மற்றும் தூய்மை அருணை சார்பில் தீபத் திருவிழாவிற்கு வருகை தந்த ஆன்மீகப் பெருமக்கள் மற்றும் பொதுமக்களுக்கு நேற்று (3.12.2025) காலை அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

உணவுவழங்கும்நிகழ்ச்சிக்கு கழக மருத்துவ அணி துணைத் தலைவர்டாக்டர்எ.வ.வே.கம்பன், நாடாளுமன்றஉறுப்பினர்சி.என். அண்ணாதுரை, தலைமைச் செயற்குழுஉறுப்பினர்இரா.ஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் எஸ். பன்னீர்செல்வம், மாவட்டதுணை செயலாளர் பிரியா விஜயரங்கன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் அனைவரையும் வரவேற்று பேசினார்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, 50ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆன்மீகப் பெருமக்கள் மற்றும் பொதுமக்களுக்கு, அறுசுவை உணவு வழங்குதலை, பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ. வேலு தொடங்கி வைத்தார்.

பின்னர்செய்தியாளர்களிடம் பேசும்போதுங்கடந்த 20ஆண்டுகளாக தொடர்ந்து திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில் தீபத்திருவிழாமுன்னிட்டு, இங்கே அதுவும் குறிப்பாக கலைஞர் சிலைஅருகேஅறுசுவைஉணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதுகிரிவலபாதையில்உள்ளது.14.கி.மீ.கிரிவலப்பாதையை சுற்றிவருகிற ஆன்மீகப்பெருமக்களுக்கு இங்கே அறுசுவை உணவு மாலை தீபம் ஏற்றுகிற 6.00 மணி வரை வழங்கப்படுகிறது. இதைநான்இங்கேதொடங்கி வைத்திருக்கிறேன்.

தொடர்ந்து செய்தியாளர்கள் பொதுமக்களுக்குசெய்திருக்கிற வசதி குறித்து கேட்டபோது ஙீ சென்ற ஆண்டே 40லட்சம் பேர் வருகை தந்தார்கள். அதற்குரிய வசதிகள் அரசால் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சென்ற ஆண்டைவிட கூடுதலாக மக்கள் வருவார்கள் என்பதால்கார்கள்மற்றும்வாகனங்கள் நிறுத்துமிடம்தனியாகவும், பேருந்துகள்நிறுத்துமிடம்தனியாகவும், பலஇடங்களில்அரசின்அனுமதி பெற்று உணவு வழங்கும் நிகழ்ச்சிகள்எனஆன்மீகப்பெருமக்கள் போற்றும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையையேற்று சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொருமாதபௌர்ணமிஅன்றும் இங்கு அறுசுவை உணவு தொடர்ந்துவழங்கப்பட்டுவருகிறது.

இவ்வாறு செய்தியாளர்களிடம் பேசும் போது குறிப்பிட்டார்.

அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி காலை 9.00மணியிலிருந்துமாலைதீபம்ஏற்றுகிற6.00 மணிவரைநடைபெற்றது. கேசரி, வெண்பொங்கல், புளியோதரை, வெஜ்டேபிள் சாதம், தக்காளி சாதம் எலுமிச்சை சாதம், சர்க்கரை பொங்கல் என அறுசுவை சுடச்சுட வழங்கப்பட்டது. மாவட்ட பிரதிநிதி இல.குணசேகரன் தொமுச பரசுராமன் ஆகியோர் மேற்பார்வையில், திறமையான சமையல்காரர்களைக் கொண்டு சுவையாகவும், சுகாதாரமுறையிலும் சமைக்கப்பட்டது.

முன்னதாக திருவண்ணாமலை, திருக்கோயிலூர் சாலை ஆகாஷ்மகாலில், மாவட்டபொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம் தலைமையில்பொதுமக்களுக்கு உணவு வழங்குதலை, பொதுப்பணித்துறைஅமைச்சர்எ.வ.வேலு தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில்மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, ஏ.ஏ. ஆறுமுகம், கு.கணேஷ், பகுதி செயலாளர்கள்சு.விஜி(எ)விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனு வாசன், குட்டிக.புகழேந்தி, பொதுகுழு உறுப்பினர் அன்பரசி ராஜசேகரன், நகர நிர்வாகிகள் அ.கண்ணன், துரை வெங்கட், முன்னாள் அறங்காவலர் சினம்பெருமாள், வழக்கறிஞர் என்.முரளி, மாவட்ட துணைஅமைப்பாளர்கள்பா.அரிகிருஷ்ணன், வேங்கிக்கால்பரத், விமல்ராஜ், ஐடிஐ மணி, ஆனந்த், யுவராஜ், விக்ரம், டி.எம்.வெங்கடேசன், ஏ.எம்.பாஷா, ராயல். தியாகு, ஆ.தே.முருகையன், வேங்கிக்கால்வெற்றி, எஸ்.சங்கர்வடிவேல், சா.ரகுநாத் வட்ட செயலாளர்கள் மா.வினோத்குமார், எஸ்.கே.டி. வீரா, சங்கர், சி.கே.சசிகுமார், கே.வெங்கட், கே.ஆனந்தன், சக்தி கணேஷ், மணி (எ) விக்னேஷ், துரைமுருகன், கொரியர் சீனு உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### மாங்குரோவ் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ்

# தமிழ்நாட்டிற்கென உரிய முன்முயற்சிகளை ஒன்றிய அரசு எடுத்துள்ளதா?

## மக்களவையில் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, டிச. 4–

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் மக்களவையில், மாங்குரோவ் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டிற்கென உரிய முன்முயற்சிகளை, ஒன்றிய அரசு எடுத்துள்ளதா? என்றும், மாங்குரோவ் காடுகளின் பரப்பளவு விரிவடைந்துள்ளதா? என்றும், மீனவர்களின் வாழ்வாதாரத்தை பெருக்கவும், சுய உதவிக்குழுக்களை ஊக்குவிக்கவும் ஏதேனும் திட்டங்கள் ஒன்றிய அரசிடம் உள்ளதா? என்றும் ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் காடுகள் துறையின் இணையமைச்சர் கீர்த்தி வரதன் சிங் அவர்களிடம் விரிவான கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் காடுகள் துறையின் இணைஅமைச்சர் அளித்த பதில் வருமாறு:–

இந்திய கடற்கரை ஓரங்களில் உள்ள மாங்குரோவ் காடுகளை பாதுகாக்கவும் அவற்றின் பரப்பளவை பெருக்கவும், 2023–24ம் நிதி யாண்டில் மாங்குரோவ் காடுகளுக்கென புதிய திட்டத்தை ஒன்றிய அரசு அறிவித்தது என்றும், இதன் மூலம் பல்வேறு மாநிலங்களில் செயல்பட்டு வந்த சிறு சிறு திட்டங்களை ஒருங்கிணைத்து மீனவர்களும், பெண்களின் சுய உதவிக் குழுக்களும் பயனடையும் வகையில் மாங்குரோவ் காடுகள் வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தபட்டு வருகிறது.

2022–23 மற்றும் 2024–25ம் நிதியாண்டுகளில் நபார்டு மற்றும் பசுமை தமிழகம் ஆகிய திட்டங்களின் கீழ், தமிழ்நாடு அரசின் காடுகள் வளர்ப்புத் துறை 95 ஹெக்டேர் அளவிற்கு மாங்குரோவ் காடுகளின் பரப்பளவை அதிகரித்துள்ளது என்றும், 250ஹெக்டேர் காடுகள் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது என்றும், 52000க்கும் அதிகமான மாங்குரோவ் கண்றுகள் நடப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த இரண்டு நிதி யாண்டுகளில் அதாவது 2023–24 மற்றும் 2024–25ல் 13 மாநிலங்களில் 22560 ஹெக்டேர் அளவிற்கு மாங்குரோவ் காடுகள் புதுப்பிக்கப் பட்டுள்ளன என்றும், தமிழ் நாட்டில் 1082 ஹெக்டேர் அளவிற்கு மாங்குரோவ் காடுகள் சீரமைக்கப் பட்டுள்ளன என்றும் இவற்றினால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட்டு வருவதோடு, பெண்கள் சுயஉதவி குழுக்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும், ஒன்றிய அரசின் இணையமைச்சர் கீர்த்தி வரதன் சிங் அவர்கள் விரிவான பதில் அளித்துள்ளார்.

### ஒரே நாளில் ரூ.302.73 கோடி வசூல்!

# புதிய மைல்கல்லை எட்டிய பதிவுத்துறை!

## அமைச்சர் பி.மூர்த்தி தகவல்!



சென்னை, டிச. 4–

தமிழ்நாடு அரசின் வருவாய் ஈட்டும் துறைகளில் முக்கிய துறையாக விளங்கிவரும் பதிவுத் துறையில் 01.12.2025 அன்று கார்த்திகை மாத சுப முகூர்த்த நாளில் ஆவணங்கள் அதிக அளவில் பதிவுக்கு தாக்கல் செய்யப்படும் என்பதால் சிறப்பு நிகழ்வாக பொது மக்கள் பயன் பெறும் வகையில் கூடுதலாக முன்பதிவு வில்லைகளின் எண்ணிக்கை உயர்த்தி வழங்கப்பட்டது.

அதன்படி, பொது மக்கள் உயர்த்தப்பட்ட முன் ஆவணப்பதிவு வில்லைகளைப் பயன்படுத்தி கடந்த 01.12.2025 அன்று ஒரே நாளில் இதுவரையில் இல்லாத அளவில் ரூ.302.73/– கோடி (முந்நூற்று இரண்டு கோடியே எழுபத்து மூன்று இலட்சம் ரூபாய்) வருவாய் அரசுக்கு ஈட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு நாள் வருவாய் வசூலில் புதிய மைல்கல்லை பதிவுத்துறை எட்டியுள்ளது என வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்துள்ளார்.

### வள்ளலாரின் புகழுக்கு பெருமை சேர்க்கும் வகையில்

# வள்ளலார் பன்னாட்டு மாநாடு சென்னையில் நடத்தப்படும்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!



சென்னை, டிச. 4-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் 29.11.2025 அன்று ஆணையர் அலுவலகத்தில் திருஅருட்பிரகாச வள்ளலார் சுத்த சன்மார்க்க பன்னாட்டு மாநாடு - 2026 முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் வள்ளலார் சர்வதேச மாநாட்டை சிறப்பாக நடத்திடும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து துறை அலுவலர்கள் மற்றும் வடலூர் தலைமை சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தின் நிர்வாகிகளின் கருத்துகளை கேட்டறிந்தார்.

இக்கூட்டத்தில் வள்ளலார் பன்னாட்டு மாநாட்டினை சென்னையில் 2026 ஜனவரி மாதத்தில் நடத்துதல், மாநாட்டு பணிகளை ஒருங்கிணைந்து மேற்கொள்ளும் வகையில் துறை மற்றும் சன்மார்க்க அமைப்புகளை கொண்ட குழுக்களை அமைத்தல், வெளிநாடுகளிலிருந்து பங்கேற்க வருகை தரும் சன்மார்க்க அன்பர்களுக்கான வசதிகளை ஏற்பாடு செய்தல், வள்ளலாரின் நெறிகளை பரப்பிடும் வகையிலான கண்காட்சி, மூலிகைக் கண்காட்சி மற்றும் சித்த மருத்துவ முகாம் அமைத்தல், பள்ளி மற்றும் கல்லூரிகளில் வள்ளலார் குறித்த இலக்கிய போட்டிகளை நடத்தி பரிசுகள் வழங்குதல், கருத்தரங்கம், ஆய்வரங்கம், சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல், நாள் முழுவதும் அன்னதானம் வழங்குதல், சிறந்த சன்மார்க்கிகளுக்கு விருதுகள் வழங்கி சிறப்பு செய்தல், மாநாட்டு மலர் மற்றும் ஆய்வுக் கட்டுரை மலர் வெளியிடுதல், வள்ளலாரின் தத்துவங்கள் மற்றும் அருள்நெறியைப் பரப்பிடும் வகையில் முழுவதும் பெண்களே பங்கேற்கும் பேரணி நடத்துதல் போன்ற பொருண்மைகள் குறித்து விரிவான ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.

நிறைவாக, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் பேசுகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடிய வள்ளல் பெருமகனாரின் புகழுக்கு பெருமை சேர்க்கும் வகையில் பல்வேறு நற்பணிகளை ஆற்றி வருவதை அனைவரும் அறிவோம். திருஅருட்பிரகாச வள்ளலார் பிறந்த அக்டோபர் 5 ஆம் நாளை “தனிப்பெருங்கருணை நாள்” ஆக கடைபிடிக்கப்படும் என அறிவித்ததோடு மட்டுமல்லாமல், தேர்தல் அறிக்கையில் அறிவித்தவாறு வடலூரில் வள்ளலார் சர்வதேச மையத்தை அமைப்பதற்கு ரூ.99.90 கோடியை அரசு நிதியாக வழங்கினார்கள்.

வள்ளலாரின் முப்பெரும் விழாவினை அக்டோபர் 2022 முதல் அக்டோபர் 2023 வரை 52 வாரங்களுக்கு சிறப்பாக கொண்டாடியதோடு, அதன் தொடக்க விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே கலந்து கொண்டு, வள்ளலார் - 200 இலச்சினை, தபால் உறை மற்றும் சிறப்பு மலர் ஆகியவற்றை வெளியிட்டு, ஆண்டு முழுவதும் அன்னதானம் வழங்கும் நிகழ்வையும் தொடங்கி வைத்து, முப்பெரும் விழாப் பணிகளுக்காக ரூ.3.25 கோடியை அரசு நிதியாக வழங்கினார். நிறைவு விழா நிகழ்ச்சியிலும் பங்கேற்று சிறப்பு செய்தார்.

அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைகளை பெற்று, வருகின்ற 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாத இறுதியில் திருஅருட்பிரகாச வள்ளலார் சுத்த சன்மார்க்க பன்னாட்டு மாநாடு - 2026 மிக சிறப்பாக சென்னையில் நடத்திட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்மாநாட்டிற்கு தமிழ்நாடு அரசும், இந்து சமய அறநிலையத்துறையும் அனைத்து உதவிகளையும் செய்து தருவதற்கு தயாராக உள்ளது. ஆகவே, துறை அலுவலர்கள் மற்றும் சன்மார்க்க சங்கங்களின் நிர்வாகிகள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல் திட்டங்களை வகுத்து, எல்லா வகையிலும் இம்மாநாடு சிறப்பாக அமைந்திட அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றிட வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் முனைவர் துரை.ரவிச்சந்திரன், கூடுதல் ஆணையர்கள் சி.ஹரிப்ரியா, மா.கவிதா, பொ.ஜெயராமன், கோ.செ.மங்கையர்க்கரசி, ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் திரு.சுகிசிவம், தேச மங்கையர்க்கரசி, இணை ஆணையர்கள் இரா.வான்மதி, சி.ஜோதி, கி. ரேணுகாதேவி, ஐ. முல்லை, பெ.க. கவெனிதா, வடலூர் தெய்வ நிலையத்தின் அறங்காவலர் குழுத் தலைவர் க.அழகானந்தன், வடலூர் தலைமை சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தின் தலைவர் அருள் நாகலிங்கம், வெற்றிவேல், நிர்வாகிகள் வெங்கடேசன், செந்நெறி தண்டபாணி, செயல் அலுவலர் ஜெ. ராஜா சரவணகுமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### புழல் மற்றும் மீஞ்சூர் பகுதிகளில் மழை நீர் வெளியேற்றும் பணிகள்:

# நரிக்குறவர் சமூக மக்களுக்கு நிவாரண பொருட்கள்!

## அமைச்சர் சா.மு.நாசர் ஆய்வு மேற்கொண்டு வழங்கினார்!

திருவள்ளூர் டிச 04

திருவள்ளூர் மாவட்டம், புழல் ஊராட்சி ஒன்றியம், தீர்த்தகரியம் பட்டு குமரன் நகர் பகுதியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தேங்கியுள்ள மழை நீர் வெளியேற்றும் பணிகள் தொடர்பாக நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு மழை நீரை வெளியேற்றும் பணிகளை விரைந்து மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், அரியன்வாயில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தற்காலிக நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள 17 குடும்பங்களை சேர்ந்த 58 நரிக்குறவர் சமுதாயத்தை சேர்ந்தவர்களுக்கு உணவு, உடை உள்ளிட்ட அத்தியாவசிய நிவாரணப் பொருட்களை வழங்கி ஆறுதல் கூறினார். கூடுதலாக முகாம்களுக்கு வெளியே உள்ள 250 நரிக்குறவர் சமுதாயத்தை சேர்ந்தவர்களுக்கு உணவு பொட்டலங்களும், 3 வேளைகளிலும் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், அரியன்வாயில் ஊராட்சி ஒன்றியத்தில் நரிக்குறவர் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் குடியிருப்பு பகுதிகளில் தேங்கியுள்ள மழை நீர் வெளியேற்றும் பணிகள் தொடர்பாக நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு நீரை வெளியேற்றும் பணிகளை விரைந்து மேற்கொள்ளவும் மாற்று இடம் வழங்குவதற்கு ஆய்வு மேற்கொள்வது தொடர்பாகவும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். அத்திப்பட்டு பகுதிகளில் தேங்கியுள்ள மழை நீரை இரட்சத இயந்திரங்களின் மூலம் வெளியேற்றப்படும் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ், ஊரக வளர்ச்சித் துறை செயற்பொறியாளர் ராஜவேல், தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ் , ஒன்றிய செயலாளர்கள் ஆ.ராஜா, வே.ஆனந்த் குமார், மற்றும் நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பலர் உள்ளனர்

### 91,711 விவரங்கள் பதிவு செய்யப்பட்டு

# 45,916 செல்லப் பிராணிகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளது!

## மேலும் ஒரு வாரத்திற்கு நீட்டிப்பு! சென்னை மாநகராட்சி தகவல்!

சென்னை, டிச.4-

செல்லப்பிராணிகளுக்கான உரிமம் பெறுவதற்கான காலக்கெடு 07.12.2025 வரை நீட்டிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது 14.12.2025 வரை மேலும் ஒரு வாரத்திற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் செல்லப் பிராணிகளுக்கு (நாய்கள் மற்றும் பூனைகள்) மைக்ரோசிப் செலுத்துதல், வெறிநாய்க்கடி நோய்த்தடுப்பூசி செலுத்துதல் உள்ளிட்ட ஒருங்கிணைந்த மேலாண்மைக்காக மேம்படுத்தப்பட்ட இணையதள சேவை பெருநகர சென்னை மாநகராட்சியில் மாண்புமிகு மேயர் அவர்களால் 03.10.2025 அன்று தொடங்கப்பட்டது. இந்த இணையதள சேவையானது, செல்லப் பிராணிகள் மற்றும் தெரு நாய்களின் தடுப்பூசி விவரங்கள் மற்றும் மீண்டும் அடுத்த தவணை தடுப்பூசி செலுத்த வேண்டிய தேதிகளை திறம்பட கண்காணிக்க உதவுகிறது.

செல்லப்பிராணிகளுக்கு ஆண்டுதோறும் வெறிநாய்க்கடிநோய்த் தடுப்பூசி (Anti Rabies Vaccination) செலுத்தப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தவும், இந்த தடுப்பூசி செலுத்தப்பட்ட நாள் முதல் ஓராண்டு காலத்திற்கு மட்டும் உரிமம் செல்லத்தக்கது என்பதை உறுதிப்படுத்தி மீண்டும் உரிமம் புதுப்பிக்கப்படுவதை உறுதி செய்யவும், செல்லப் பிராணிகள் கைவிடப்படுவதை (Pet Abandonment) தடுப்பதற்காகவும் செல்லப்பிராணிகளுக்கு மைக்ரோ சிப் செலுத்தி உரிமம் பெறுவது பெருநகர சென்னை மாநகராட்சியில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்த மைக்ரோசிப் எண்ணுடன் செல்லப்பிராணிகளின் உரிமையாளரின் பெயர், முகவரி உள்ளிட்ட தரவுகள் பதிவு செய்யப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் இணையதளத்தில் இதுவரை 91,711 செல்லப்பிராணிகள் விவரங்கள் பதிவு செய்யப்பட்டு, 45,916 செல்லப் பிராணிகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

செல்லப்பிராணிகள் உரிமையாளர்களின் கோரிக்கையின் அடிப்படையில் செல்லப்பிராணிகளுக்கான உரிமம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட 23.11.2025 என்ற காலக்கெடுவானது, 07.12.2025 வரை நீட்டிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் தற்போது பெய்து வரும் தொடர் மழை காரணமாகவும் செல்லப்பிராணிகள் உரிமையாளர்களின் கோரிக்கையினை ஏற்றும் செல்லப்பிராணிகளுக்கு உரிமம் பெறுவதற்கான காலக்கெடு 14.12.2025 வரை மேலும் ஒரு வார காலத்திற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டில் இயங்கும் திரு.வி.க. நகர், புளியந்தோப்பு, லாயிட்ஸ் காலனி, நுங்கம்பாக்கம், கண்ணம்மாப்பேட்டை, மீனம்பாக்கம் ஆகிய 6 செல்லப்பிராணிகள் சிகிச்சை மையங்களிலும், சோழிங்கநல்லூர் நாய் இனக்கட்டுப்பாட்டு மையத்திலும் மைக்ரோசிப் பொருத்துதல், வெறிநாய்க்கடி நோய்த்தடுப்பூசி (Anti Rabies Vaccination) செலுத்துதல், உரிமம் வழங்குதல் உள்ளிட்ட சேவைகள் இலவசமாக வாரத்தின் அனைத்து நாட்களிலும் தினசரி காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, செல்லப்பிராணிகளின் உரிமையாளர்கள் இதனைப் பயன்படுத்தி 14.12.2025க்குள் தங்களின் செல்லப் பிராணிகளுக்கான உரிமத்தை கட்டாயம் பெற்றுக் கொண்டு அபராதம் செலுத்துவதைத் தவிர்த்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.